**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII-Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF -CUM- JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No.S.T.C.No. 5/2024**

**Deposition of Witness for Complainant PW1**

**திரு. சுந்தரம், த/பெ. கருப்பையா**

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**25.06.2025** **Witness Signature :**

**குறுக்கு விசாரணை PW1 11.30 A.M**

1. இந்த வழக்கின் காசோலையின் அடிப்படையில் தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த காசோலையில் இரண்டு பேரின் பெயர் பிரிண்ட் ஆகி உள்ளது என்று சொன்னால் சரிதான். அதில் ஒன்று John Cassia N George மற்றொரு பெயர் ஆஷா ஜான் என்றால் சரிதான். இந்த வழக்கு காசோலையானது ஜாயின் அக்கௌன்ட் என்றால் சரிதான். இவ்வழக்கு காசோலையில் ஒரு நபரின் கையெழுத்து மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய புகாரில் 10.09.2023 ம் தேதியன்று என்னிடம் ரூ. 12,00,000/- கடன் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். கடன் பெற்ற அன்றே, ரூ. 12,00,000/- ற்கான கசோலையை என்னிடம் கொடுத்ததாக புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

2. நான் 1 மாதம் கழித்து வங்கியில் செலுத்தினால் பணமாக்கி கொள்ளலாம் என்று எதிரி சொன்னதாக எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக என்னிடம் சொன்னார். முதல் முறையாக மேற்படி விசயத்தை இப்பொழுது தான் நான் சொல்கிறேன் என்று சொன்னால் சரிதான்.

உண்மையிலேயே எதிரி அவ்வாறு சொல்லியிருந்தால் எனது புகார் மனுவிலே நான் சொல்லியிருப்பேன் என்றாலும் இவ்வழக்கிற்காக தற்பொழுது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் ரூ. 12,00,000/– கடன் வாங்கியதற்கு ஆதரமாக ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிரயப்பத்திரம் ஒன்று எழுதிக்கொடுத்துள்ளார் அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

3. நான் சொன்னதுபோல் எதிரி எந்தவித பத்திரமும் எனக்கு எழுதிகொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் மளிகைக்கடை மற்றும் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு அதில் எவ்வளவு வருமானம் எனக்கு வருடத்தில் வருமென்றால் வருடத்திற்கு ரூ. 1,00,000/– வரும், ஆனால் நான் எதிரிக்கு கொடுத்த தொகையானது நான் சேர்த்து வைத்திருந்த பணமாகும். எனக்கு வங்கிகணக்கு உள்ளது. எனக்கு வரும் வருமானங்கள் அனைத்தையும் அதில் தான் டெபாசிட் செய்வேன் என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்த கூடியவரில்லை. நான் எதிரிக்கு கொடுத்த பணமானது டிடி மூலமாகவோ அல்லது Account Payee Cheque மூலமாக கொடுக்கவில்லை என்றால் சரிதான். வருமான வரி செலுத்தக்கூடியவர் இல்லை என்றாலும் Nill Report அரசுக்கு காட்ட வேண்டும் என்று சொன்னால் நான் காட்டுவதில்லை.

4. மேற்படி காசோலை தொகையை நான் வருமானவரி கணக்கில் காட்டவில்லை. நான் வைத்திருக்கும் மளிகைக் கடைக்கு விற்பனை வரி செலுத்தி வருகிறேன். சிலநேரம் நஷ்டம் ஏற்படும் சிலநேரம் லாபம் ஏற்படும் என்பதால் விவசாயம் மூலம் எவ்வளவு வருமானம் வருகிறது என்று சரியாக சொல்லமுடியாது. வருடத்திற்கு விவசாயம் மூலம் சுமார் ரூ. 2,00,000/– வருமானம் வரும். எதிரி என்னிடம் ரூ. 2,00,000/– கடன் வாங்கியதற்கு

கொடுத்த கசோலையை ரூ. 12,00,000/- என பூர்த்தி செய்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ரூ. 12,00,000/- கடன் கொடுக்குமளவிற்கு எனக்கு தகுதியில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/- G. Amirdham, 25.06.2025.
Judicial Magistrate,
Kotagiri